Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO. 06/2022
DEPOSITION OF DEFENSE SIDE EVIDENCE No. 1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கோவிந்தராஜ் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கிருஷ்ணன் | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | சென்னை | மதம் | |
| மாவட்டம் | சென்னை | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 28th day of April 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எ.சா.1 திரு.கோவிந்தராஜ் முதல் விசாரணை.-**

என் சொந்த ஊர் ஆண்டியப்பனுர் ஆகும். தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். ஓட்டல் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் என் இரண்டாவது அக்கா சரஸ்வதியின் கணவர் ஆவார். கடந்த ஏப்ரல் 2021 ல் புகார்தாரர் மற்றும் அவரது மனைவியிடம் இருந்து ரூ. 3,00,000/- ரூ.2 வட்டிக்கு வாங்கினேன். ஆறு மாதங்களாக அவர் கூறியது போல் மாதமாதம் ரூ.6000/- புகார்தாரரின் வங்கி கணக்கில் செலுத்தினேன். பின்பு திடீரென்று ஒரு நாள் என் வங்கி கணக்கிற்கு ரூ. 20 இலட்சத்திற்காக காசோலை தாக்கல் செய்யப்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. அதன் பின்பு நான் வட்டி கொடுப்பதை விட்டுவிட்டேன். பின்பு புகார்தாரரிடம் நான் ஏன் இவ்வாறு செய்தீர்கள் என்று போனில் கேட்டேன். புகார்தாரர் தரப்பில் எந்த ஒரு பதிலும் இல்லாததால் என் அக்கா சரஸ்வதியிடம் நான் சென்று கேட்டதற்கு எனது சொந்த ஊரான ஆண்டியப்பனூரில் உள்ள என் வீட்டை புகார்தாரருக்கு எழுதிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் ஏன் இவ்வாறு செய்கிரீர்கள் என்று சிறிது கால அவகாசம் கொடுத்ததால் நான் வாங்கிய 3 இலட்சத்தையும் திருப்பி கொடுப்பதாக கூறினேன். ஆனால் அவர்கள் ஏற்கவில்லை. அதன் பின்பு தான் புகார்தாரர் மற்றும் அவரது மனைவி முன்பே வியுகம் செய்து என்னிடம் இருந்து ஈடாக கையொப்பம் இட்ட பூர்த்தி செய்யப்படாத காசோலைகள் மற்றும் இரண்டு பாண்டு பேப்பரும் அவர்கள் வாங்கியது எனக்கு புரிந்தது. அந்த காசோலையில்

நான் மட்டுமே கையொப்பம் செய்துள்ளேன். என் மனைவி அதில் கையொப்பம் இடவில்லை. பின்பு இவ்வழக்கை நான் நடத்தி வருகிறேன். எனவே வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

என் சகோதரியான சரஸ்வதியும் புகார்தாரரும் சட்டப்படி கணவன் மனைவியா என்றால் சரிதான். பெரியோர்களால் புகார்தாரருக்கும் என் சகோதரி சரஸ்வதிக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டதா என்றால் இல்லை. அவர்கள் பதிவு திருமணம் செய்து கொண்டார்கள். என் சகோதரி சரஸ்வதி வாணியம்பாடியை சேர்ந்த கணேசன் என்பவரை திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் அவர்களுக்குள் ஏற்பட்ட திருமணம் சட்டப்படி விவாகரத்தில் முடிந்தது. புகார்தாரர் இரயில்வே துறையில் பணியாற்றி வந்தார். ஆனால் என்ன பதவி வகித்ததார் என்று எனக்கு தெரியாது. என் சகோதரி சரஸ்வதி புகார்தாரரின் மனைவி அல்ல என்றாலும் அவரது வீட்டு வேலைக்கார் என்றாலும் சரியல்ல. என் சகோதரி சரஸ்வதி புகார்தாரரின் வேலைக்கரர் என்பதால் அவர் மூலமாக புகார்தாரர் எனக்கு பழக்கம் என்றாலும் புகார்தாரர் இரயில்வே துறையில் இருந்து ஓய்வு பெற்ற போது அவரக்கு கிடைத்த பணத்தை நானும் என் சகோதரி சரஸ்வதியும் அபகரிக்க முயற்சித்தோம் என்றால் சரியல்ல. 2021 ல் நான் மட்டும் கையொப்பம் இட்ட பூர்த்தி செய்யப்படாத கசோலைகளை புகார்தாரருக்கு கொடுத்ததாக நான் ஒப்புகொள்கிறேன் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் புகார்தாரரிடம் இருந்து பணத்தை பெறும் போது அவர் எடுத்த வீடியோ பதிவை அவர் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறானது ஆகும். நானும் என் மனைவியும் என் சகோதரியும், மூத்த குடிமகன் ஆன புகார்தாரரை ஏமற்ற வேண்டி பணத்தை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண்.1**
**திருப்பத்தூர்.**